**ஸ்ரீ வித்யா மந்திர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)**
(தேசிய தர மதிப்பீட்டுக் குழுவால் (ஏ) கிரேடு பெற்றது.
**பல்கலைக்கழக மானியக் குழுவால் 2(F) மற்றும் 12(B) அங்கீகாரம் பெற்றது)**
காட்டேரி, ஊத்தங்கரை - 636 902.

**தமிழாய்வுத்துறை**

**தமிழில் திறனாய்வுக் கோட்பாடுகள்**

**இணையவழி ஒரு நாள் மாநிலக் கருத்தரங்கு**

21.03.2022

**கருத்தரங்க அறிக்கை**

ஸ்ரீ வித்யா மந்திர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) ஊத்தங்கரை, தமிழாய்வுத் துறையின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி பிரிவு நடத்திய இணையவழி மாநிலக் கருத்தரங்கு **தமிழில் திறனாய்வுக் கோட்பாடுகள்** என்ற தலைப்பில் 21.03.2022 ஒரு நாள் சிறப்பாக நடைபெற்றது.

இக்கருத்தரங்கைக் கல்லூரியின் நிறுவனர் திருமிகு.வே. சந்திரசேகரன் அவர்கள் தலைமையேற்று தொடங்கி வைத்தார். கல்லூரின் செயலர் திரு ஆர்.பி. ராஜீ அவர்களும் துணைச்செயலர் திரு. பெ.வெங்கடாசலம் அவர்களும் கருத்தரங்கத்திற்கு முன்னிலை வகித்தனர்.

கல்லூரி முதல்வர் முனைவர் த.பாலசுப்பிரமணியன் அவர்களும் துணை முதல்வர் முனைவர் ந.குணசேகரன் அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள். தமிழ்த்துறை தலைவர் முனைவர் **பெ. சுரேஷ்** அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் ம. இராமச்சந்திரன் அவர்கள் சிறப்பு விருந்தனரை அறிமுகப்படுத்தினார். கருத்தரங்கு சிறப்பு சொற்பொழிவாளர் **முனைவர். பி. பாலசுப்பிரமணியம்** உதவிப் பேராசிரியர் தூய நெஞ்சக் கல்லூரி திருப்பத்தூர் அவர்கள் தமிழ் இலக்கியங்களில் திறனாய்வுக் கோட்பாடுகளைப் பயன்படுத்தி எவ்வாறு ஆய்வு செய்வது குறித்துப் பல்வேறு கருத்துக்களை பகிர்ந்துக் கொண்டார். இதில் 230 க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்துக் கொண்டனர். இறுதியாக மாணவர்கள் தங்களின் ஐயங்களைக் கேட்டு பின்னூட்டங்களை வழங்கினர். கருத்தரங்கின் நிறைவாக தமிழ்த்துறைப் பேராசிரியர் திரு. கோ. அசோகன் நன்றி கூறினார்.